திருநெல்வேலி, அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திரு. ம. தேவவரம் இனிய வேந்தன், பி.பி.ஏ., எம்.ஏ.,

ந.க.எண் : 000306 / உ.இ.1 / 2019 நாள் :31.10.2019

பொருள் : நிர்வாகம் - அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி - 1 - தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி IV - தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 - திரு. வே.மணிவாசகம் என்பவருக்கு தட்டச்சராகப் பணிநியமனம் வழங்கியது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை :

1. அரசாணை எண். 130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.22.07.2008
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடிதம் எண்.1717/PSD –A / 2019 நாள்.20.02.2019
3. சென்னை-6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதம் ந.க. எண் 023322/இ2-1/2019 நாள் : 20.02.19
4. திருநெல்வேலி - 1 அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.000306/உ.இ.1/ 2019 நாள். 25.02.19
5. சென்னை-6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதம் ந.க. எண்.100179/இ2-1/2019 நாள் : 30.10.19

***

ஆணை :

பார்வை 2இல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடிதம் மற்றும் பார்வை - 3 இல் குறிப்பிட்டுள்ள சென்னை -6 அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதத்திற்கிணங்க, பார்வை - 4இல் குறிப்பிடப்பட்டுள்ள இவ்வலுவலகச் செயல்முறைகளின்படி திரு.வே.மணிவாசகம், தட்டச்சர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு 01.03.2019 அன்று முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

திரு. வே. மணிவாசகம், தட்டச்சர் பணியில் சேர்ந்த நாளான 01.03.2019 முற்பகல் முதல் அப்பணியாளரின் பணி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், அன்னார் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவம் முடிப்பதற்குள் பார்வை - 1 இல் காணும் அரசாணையின்படி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் Computer on Office Automation சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இந்நியமனம் தற்காலிகமானதெனவும் தொகுதி IV பணி நியமனத்தில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் 2015 - 2016, 2016 -17 மற்றும் 2017 -18 ஆண்டுகளில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுவின் முடிவிற்கு உட்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

31/10/19

உதவி இயக்குநர்.

பெறுநர்:

திரு.வே.மணிவாசகம், தட்டச்சர்.(அலுவலகம்)

நகல் : 1. சென்னை-6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்)அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.